# நவீன தமிழிலக்கியத்தில் பெண்ணின் இருப்பும் சவால்களும்: அம்பையின் சிறுகதைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

**சி. கவிதா**

மொழியியல்துறை, களனிப் பல்கலைக்கழகம், இலங்கை
kavithasivapalan@gmail.com

**சுருக்கம்:** நவீன தமிழிலக்கிய வரலாற்றில் படைப்பிலக்கியங்கள் மூலம் சமூகத்தில் பெண்களின் விடுதலைக்காகவும் அவர்களின் வலுவான ஆளுமை விருத்திக்காகவும் பெண்ணியக் குரலை உயர்த்திக் காட்டிய தமிழ் நாட்டுப் பெண் எழுத்தாளரான அம்பையின் சிறுகதைகள் மூலம் தற்போதைய சமுதாயத்தில் பெண்ணின் இருப்பும் சவால்களும் பற்றி இவ் ஆய்வுக்கட்டுரையில் ஆராயப்படவுள்ளது. அம்பை குறிப்பாக, விடுதலைக்குப் பின்னர் ஏற்பட்ட சமூக மாறுதல்களில் பெண்களின் நிலைப்பாடுகளும் அவர்கள் எதிர்நோக்கும் சவால்களும் பற்றி படைப்பாக்கங்களினூடாக தானும் ஒரு பெண் என்ற உணர்வொன்றிப்புடன் யதார்த்தபூர்வமாக எடுத்துக்காட்டியுள்ளார். ஆணாதிக்கக் கருத்துநிலை முனைப்புப் பெற்ற சமூகத்தில் பெண்ணின் இருப்பு, வகிபங்கு, சவால்கள், சமூக இயங்குதளத்தில் அவளுக்குரிய இடம் பற்றிய புரிதலை ஏற்படுத்தியதோடு, அவள் வாழ்வதற்கான கோரிக்கையினை தீட்சணியத்தோடு தன் படைப்புக்களினூடாக முன்வைத்துள்ளார். பேசுபொருளால் ஏனைய எழுத்தாளர்களை விடப் பெரிதும் வேறுபட்டு நிற்கும் அம்பை தான் சொல்ல விழைவதைப் பேசிய முறையால் தனக்கெனத் தனித்துவமானதொரு பாணியினைத் தமிழிலக்கிய வரலாற்றில் பதிகைப்படுத்தினார். சில விடயங்களைச் சொல்லத் தயங்கும் பெண் எழுத்தாளர்களிடமிருந்து வேறுபட்டு நிற்கும் அம்பையின் படைப்பாக்க ஆளுமையானது உணர்ந்தும் உணரப்படாமலும் இருந்து வரும் சூழ்நிலையில் அவரது படைப்புகள் மூலம் எடுத்துக்கூறவிழையும் கருத்துகளை ஆராய்வதும், பெண்ணியக் கோட்பாடுகளைச் சிறுகதைகள் மூலம் வெளிப்படுத்தும் அவரது எடுத்துரைப்பு முறையின் மூலம் எவ்வளவு தூரம் நடைமுறைசார் பிரயோக அறிவு (Practical knowledge) கிடைக்கப்பெறுகின்றது என்பதும் ஆய்வின் புலமைத் தேடல்களாகும். அம்பையின் சிறுகதைகளினூடாகப் பிரதிபலிக்கப்படுகின்ற பெண் பற்றிய பார்வையினை பெண்ணிலைவாதத் திறனாய்வுக் கோட்பாட்டினூடாக வெளிக்கொணர்தல் ஆய்வின் நோக்காகவும், அம்பையின் சிறுகதைகளினூடாகப் புலப்படுகின்ற படைப்பாளுமைகளை எடுத்துக்காட்டி, அதன் தத்துவ, அழகியல், பெண்ணிய கோட்பாட்டின் அடிப்படைகளை விளங்கிக்கொள்வதன் மூலம் பிரயோக அறிவிற்கும், சமூகப்புரிதலுக்கும் இட்டுச்செல்லுதல், சமூகத்தில் பெண் எவ்வாறு படைக்கப்பட்டுள்ளாள்? அம்பையின் படைப்பில் பெண் யதார்த்தபூர்வமாகப் படைக்கப்பட்டுள்ளாளா? அம்பை தானும் பெண் என்ற நிலையில் நின்று உணர்வொன்றிப்புடன் யதார்த்தபூர்மாகப் பெண்ணை நோக்கியுள்ளாரா? ஆகியவற்றை ஆராய்ந்து தமிழ் சமூக பண்பாட்டு நல்லிணக்கத்திற்கும் அபிவிருத்திக்குமான ஒரு படைப்பாக இவரின் சிறுகதைகள் விளங்குகின்றன என்பதைப் புரியவைத்தல் இலக்குகளாகவும் அமைகின்றன.

தமிழிலக்கிய வரலாற்றில் பெண் பற்றிய சித்திரிப்பானது பெரும்பாலும் மரபுசார்ந்த கருத்தோட்டங்களுக்கு வடிவம் கொடுத்தே படைக்கப்பட்டுள்ளது. அம்பை இத் தன்மையிலிருந்து விலகி பெண்களது பிரச்சினையை ஒரு பெண்ணாக நின்றுகொண்டு யதார்த்தபூர்வமாக முழுச்சாத்தியப்பாட்டுடனும் கோரிக்கைகள் அடங்கியுள்ளதாகவும் படைத்திருக்கின்றார். எனினும், இத்தகைய அம்சங்களை நடைமுறையில் நோக்கமுடியாமல், தரிசிக்கமுடியாமல் போனமை பிரச்சினைக்குரிய ஒன்றாகும் என்பதும் அம்பை ஒரு பெண்ணிலைவாதியாக நின்று பெண்ணியக் கோட்பாட்டை முன்னிறுத்தி தனது படைப்பினைப் படைக்கும் போது அவரது படைப்பில் கலைத்துவப் பண்பானது இழக்கப்படுகின்றது என்பதும் காலவோட்ட அலையில் சிக்குப்படாமல் எல்லாக் காலத்திலும் அவரது படைப்புகள் அவருக்கேயுரிய தனித்துவமான பாணியில் ஒரேமாதிரி இருக்கின்றனவா என்பதும் ஆராயப்படவேண்டிய பிரச்சினைகளாகும். இதற்காக தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் இவரது கதைகள் தனித்துவமான வாழ்வியல், அழகியல், அனுபவப் பகிர்வுகளாக உள்ளன, இவருடைய கதைகளை விளங்கிக்கொள்வதன் மூலம் உடனிகழ்காலத்தில் பெண்ணின் இருப்பையும் சவால்களையும் பெண்ணிலைவாதத் திறனாய்வுக் கோட்பாட்டினடியாகப் புரிந்துகொள்ள முடிகின்றது ஆகிய கருதுகோள்கள் முன்வைக்கப்படுகின்றன. அம்பையின் சிறுகதைகளில் இடம்பெறும் பெண் பற்றிய சித்திரிப்பினூடாக அவளின் இருப்பினையும் சவால்களையும் பெண்ணிலைவாதத் திறனாய்வுக் கோட்பாட்டினூடாக ஆராய்வதே இவ் ஆய்வின் பரப்பாகும். முதனிலைத் தரவுகளாக சிறகுகள் முறியும், வீட்டின் ஒரு மூலையில் சமையலறை ஆகிய சிறுகதைத் தொகுதிகளும் துணைநிலைத் தரவுகளாக ஆய்வு தொடர்பான நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், ஆய்வேடுகள், முன்னுரைக் குறிப்புகள் மற்றும் இணையத்தளத் தரவுகள் என்பன தரவுகளாகத் திரட்டப்பட்டு மறுவாசிப்பிற்குட்படுத்தப்பட்டு சூழமைவுபடுத்திப் பார்க்கப்படுகின்றன. ஆய்வில் பெண்ணிலைவாதத்திறனாய்வுக் கோட்பாட்டினை முதன்மைப்படுத்துவதுடன் விபரண மற்றும் அழகியல் ஆய்வு முறையியலையும் அடிப்படையாகக் கொண்டு ஆராயப்படுகின்றது.